DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 38/2022 DW : 1

Name : முருகேஷ் Age – 61

S/o : பெரியசாமி Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 25.02.2026

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1) என்னுடைய மாமனார் எனது சொந்த தாய்மாமன் என்றால் சரிதான். அவர் மாமனார் என்ற முறையில் நிறைய உரிமை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்து தான் நான் கிரையம் வாங்கினேன். அதனால் தான் என் பெயரில் பத்திரம் எழுதப்பட்டது. ராஜாரெட்டி சொத்துக்கள் என் மனைவியை பயன்படுத்திக்கொண்டு நான் ஏமாற்றி வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய மச்சான் படித்துள்ளரா என்ற விபரம் எனக்கு தெரியாது. 1995– 1996, 2009– 2010 நான் அரசாங்கம் மூலமாக ஒப்பந்த பணி எடுத்துள்ளேன் என்றால் சரிதான். அநத் ஒப்பந்த பணி எடுப்பதற்கு சொந்தமாக நிலம் இருக்கவேண்டும் என்றால் சரிதான். ஒப்பந்த பணிக்காக நான் என் மாமனாரிடம் 2 ஏக்கர் நிலம் கேட்டான் என்றால் சரியல்ல. என்னுடைய பூர்வீக கிராமத்தில் சுமார் 1 நிலம் விற்றுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பதிலுரையில் நான் என்னுடைய சம்பாத்தியத்தை வைத்து தான் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பெங்களுரில் பணிபுரிந்து அதில் வந்த வருமானத்தை வைத்து தான் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) கேசவராஜு மற்றும் லோகநாதன் என்பவர்களை தெரியும் அவர்கள்

மூலமாக தான் sub contract எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. லோகநாதன் என்னிடம் 2 ஏக்கர் இருக்கவேண்டும் என்று கூறியதால் நான் என் மாமனாரிடம் அந்த நிலத்தை எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. என் மாமனார் திரும்ப அந்த சொத்தை என் மகன் பெயருக்கு எழுதிக்கொடுக்கும் படி சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு பிறகு லதா என்ற மகனுக்கு என் மாமனார் 1 ஏக்கர் நிலம் எழுதிவைத்துளளார். சுகுனா மற்றும் சாந்தி என்பவர் நிலம் எழுதிவைத்துள்ளார். நிலத்தின் தாய் பத்திரம் யாரிடம் உள்ளது என்பது எனக்கு தெரியாது. ராஜரெட்டியிடம் தான் தாய் பத்திரம் இருக்கும். நான் பொய் சொல்கிறேன் என்றாலும் தாய் பத்திரம் என் வசம் உள்ளது என்றால் சரியல்ல.

3) ராஜரெட்டி சம்பாத்திய சொத்து மட்டும தான் எனக்கு எழுதிவைத்தார். வாதி சொல்வது போல் அவருடைய தாத்தா சொதையும் ஏமாற்றி எழுதி வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.228–ல் 12/பி என் வசம் தான் உள்ளது. அந்த சர்வே எண் கிருஷ்ணரெட்டி பெயரிலும் உள்ளது என்றால் கிருஷ்ணரெட்டி பெயரிலிருந்து ராஜரெட்டி பெயருக்கு வந்தது. கிருஷ்ணரெட்டி வாரிசுதாரர்கள் யாரும் பத்திரத்தில் கையெழுத்து போடவில்லை என்றால் அது கிருஷ்ணரெட்டியின் சொத்து கிடையாது. சர்வீஸ் பம்பு செட்டில் அரை பங்கு எழுதிவைத்துள்ளார். குமாரராஜபேட்டை கிராமத்தில் உள்ள வீடு ராஜரெட்டி பெயரில் தான் இருந்தது. அந்த வீட்டின் பத்திரம் என்னிடம் தான் உள்ளது. அந்த வீட்டின் விவரங்கள் இந்த வழககில் கேட்கவில்லை. நான் பெங்களூரிலிருந்து குமாரராஜபேட்டைக்கு தான் வந்தேன். அப்போது நான் தங்கிகொள்வதற்காக ராஜரெட்டி அந்த வீட்டை என் வசம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. அந்த வீட்டை அவரைுடைய வாரிசுதாரர்களுக்கு தெரியாமல் நான் எழுதி வாங்கியுளேள் என்றால் சரியல்ல. அந்த கிரைய பத்திரத்தில் கண்ணப்பன் தவிர வேறு வாரிசுதாரர்கள் யாரும் கையெழுத்து போடவில்லை. 2.18 ஏக்கர் நிலம் வாங்கிய பத்திரத்திலும் கண்ணப்பனை தவிர வேறு வாரிசுதாரர்கள் யாரும் கையெழுத்து போடவில்லை.

4) 1ம் வாதி நிர்மலா பெயரில் எந்த சொத்து எழுதிவைக்கவில்லை. 2ம்

வாதி மாலா கடைசி மகள் ஆவார். அவர் பெயரில் ராஜரெட்டி எந்த சொத்து எழுதிவைக்கவில்லை. நான் அவருடைய இரண்டு மகள்களுக்கு சொத்தை எழுதிவைக்காமல் அவரை ஏமாற்றி என் பெயருக்கு சொத்துக்களை வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மாமனாருக்கு எழுதி படிக்க தெரியும். என் படித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவருக்கு வெளி உலகம் தெரியாதால் அவரை ஏமாற்றி சொத்துக்களை வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு அவர் 5 குழி நிலம் மட்டும் தான் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 5, 13 பிரதிவாதிகள் ஏமாற்றி 5 குழி நிலம் வாங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. ராஜரெட்டி மற்றும் கண்ணப்பன் ஆகியோர் படிக்காததை வைத்து அவர்களை ஏமாற்றி சொத்துக்களை வாங்கியுளேள் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.